மகாராஷ்டிரத்தில் நீடிக்கும் கனமழை: 16 பேர் உயிரிழப்பு

மும்பை, மே 29: மகாராஷ்டிரத்தில் நீடித்துவரும் கனமழை காரணமாக, கடந்த 6 நாள்களில் நடந்த அசம்பாவித சம்பவங்களில் 16 பேர் உயிரிழந்துவிட்டனர். மேலும் 18 பேர் காயமடைந்தனர்.

நாட்டில் தென்மேற்குப் பருவமழை கடந்த மே 24-ஆம் தேதி தொடங்கியது. அன்றைய தினத்தில் இருந்தே மகாராஷ்டிரத்தில் பரவலாக கனமழை நீடித்து வருகிறது. கிட்டத்தட்ட மாநிலம் முழுவதுமே மழையால் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, தலைநகர் மும்பையும், புணேயும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மும்பையில் வியாழக்கிழமை மஞ்சள் எச்சரிக்கையும் (64-115 மி.மீ. மழை), புணேயில் ஆரஞ்சு எச்சரிக்கையும் (115-204 மி.மீ. மழை), சதாரா, ரத்னகிரி, சிந்துதுர்க், கோலாபூர் ஆகிய மாவட்டங்களில் சிவப்பு எச்சரிக்கையும் (204 மி.மீ.க்கு மேல்) விடுக்கப்பட்டது.

மாநிலத்தில் கடந்த மே 24-ஆம் தேதிமுதல் கனமழையால் நேரிட்ட நிலச்சரிவு, மின்னல் தாக்குதல், மரம்-கட்டடம் சரிந்த சம்பவங்களில் 16 பேர் உயிரிழந்துவிட்டதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புணே மாவட்டத்தில் 3 பேர், தாணே, லாத்தூர், பண்டாரா ஆகிய மாவட்டங்களில் தலா இருவர், ராய்கட், அகல்யாநகர், நாகபுரி, வார்தா, சந்திராபூர், மும்பை புறநகர், கோண்டியா ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் இறந்துவிட்டனர். மேலும் 18 பேர் காயமடைந்தனர். 41 கால்நடைகள் இறந்துவிட்டன என்று மாநில அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்ஸாமில் கொட்டித் தீர்த்த மழை

குவாஹாட்டி, மே 29: வங்கக் கடலில் தீவிர காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, அஸ்ஸாம் மாநிலம், குவாஹாட்டியில் புதன்கிழமை இரவுமுதல் கனமழை கொட்டித் தீர்த்தது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியதால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

அஸ்ஸாம் மட்டுமன்றி திரிபுரா, மிஸோரம் ஆகிய மாநிலங்களிலும் அடுத்த 3 நாள்களுக்கு கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

அஸ்ஸாம் மாநிலம் குவாஹாட்டியில் பலத்த மழை பெய்தபோதிலும் வெள்ளம் தேங்கிய அனில் நகர் பகுதியில் வியாழக்கிழமை பள்ளிக்குச் சென்ற மாணவிகள்.

கேரளத்தில் பலத்த சேதம்

திருவனந்தபுரம், மே 29: கேரளத்தில் பருவமழையின் தாக்கத்தால் பரவலாக பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக முதல்வர் பினராயி விஜயன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

'வெள்ளம், நிலச்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கோ அல்லது நிவாரண முகாம்களுக்கோ செல்ல வேண்டும்; தற்போது 49 முகாம்களில் 1,200 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்' என்று அவர் கூறினார்.

கேரளத்தில் பரவலாக கனமழை நீடிக்கும் நிலையில், பத்தினம்திட்டா, கோட்டயம், எர்ணாகுளம், இடுக்கி, கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர், காசர்கோடு ஆகிய 8 மாவட்டங்களில் வியாழக்கிழமை சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இடுக்கி, கண்ணூர், காசர்கோடு ஆகிய 3 மாவட்டங்களுக்கு வெள்ளிக்கிழமையும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சூறைக் காற்றுடன் கொட்டித் தீர்க்கும் கனமழையால் பல இடங்களில் மரங்கள் சாய்ந்து விழுந்துள்ளன. ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

பத்தினம்திட்டா மாவட்டத்தில் மணிமாலா மற்றும் அச்சன்கோவில், கோட்டயத்தில் மீனச்சில், கோழிக்கோட்டில் கோரப்புழா, வயநாட்டில் கபனி ஆகிய ஆறுகளில் நீரோட்டம் அதிகரித்துள்ளதால், கரையோர மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு கொள்முதல் திட்டங்களில் தாமதம்

விமானப் படை தலைமைத் தளபதி கவலை

புது தில்லி, மே 29: பல்வேறு பாதுகாப்பு கொள்முதல் திட்டங்களை செயல்படுத்துவதில் அதிக தாமதம் ஏற்படுவதாக இந்திய விமானப் படை (ஐஏஎஃப்) தலைமை தளபதி அமர்பிரீத் சிங் வியாழக்கிழமை கவலை தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் தேசத்துக்கு கிடைத்த வெற்றி என அவர் புகழாரம் சூட்டிய நிலையிலும், பாதுகாப்பு கொள்முதல் திட்டங்கள் தாமதமாவதற்கு அவர் கவலை தெரிவித்தார்.

இந்திய தொழிலக கூட்டாண்மையின் (சிஐஐ) வணிக மாநாட்டில் பங்கேற்ற அவர் ஆபரேஷன் சிந்தூரைத் தொடர்ந்து இந்தியா-பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட மோதல் குறித்து முதல்முறையாக பேசினார்.

அப்போது அவர், ' எதிர்கால இலக்குகள் மற்றும் திட்டங்கள் குறித்த தெளிவான கொள்கையை வகுக்க ஆபரேஷன் சிந்தூர் நமக்கு உதவியது. நாம் உண்மை வழியை பின்பற்றினோம். அதற்கு பரிசாக வெற்றியை நமக்கு கடவுள் வழங்கியுள்ளார் என எண்ணுகிறேன்.

இது ஒருபுறம் மகிழ்ச்சியை தந்தாலும் பாதுகாப்பு கொள்முதல் சார்ந்த பல திட்டங்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் செயல்படுத்தப்படவில்லை. காலக்கெடு பெரும் பிரச்னையாக உள்ளது. ஒரு திட்டம் கூட குறிப்பிட்ட காலஅளவுக்குள் நிறைவுபெறுவதில்லை.

இது மிகவும் தீவிரமான பிரச்னையாகும். ஒரு திட்டத்துக்கான ஒப்பந்தம் கையொப்பமாகும்போதே அது குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவடையாது என நாம் உறுதியாக சொல்லலாம்.

எனவே, ராணுவத்தை நவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் நாம் தீவிரம் காட்டுவது அவசியம். அடுத்த பத்தாண்டுகளில் நமது பாதுகாப்புப் படை மிகவும் வலிமையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இன்று என்ன தேவை என்பதை நினைவில் வைத்தே ஒவ்வொரு திட்டத்தையும் விரைவாக முடிக்க வேண்டும்' என்றார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இந்திய கடற்படை தலைமை தளபதி போர்க்களத்தில் நாளுக்கு நாள் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதை ஆபரேஷன் சிந்தூர் நமக்கு உணர்த்துகிறது எனக் கூறினார்.

ஆக்கிரமிப்பு காஷ்மீர் மக்கள் இந்தியா திரும்பும் நாள் தொலைவில் இல்லை

புது தில்லி, மே 29: பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வசிக்கும் மக்கள் இந்தியா திரும்பும் நாள் தொலைவில் இல்லை என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

புது தில்லியில் சிஐஐ அமைப்பு சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற வர்த்தக உச்சிமாநாட்டில் பங்கேற்று அவர் பேசியதாவது:

ராஜ்நாத் சிங்



பயங்கரவாதம் தொடர்பான தனது உத்தியையும் பதிலடியையும் இந்தியா மறுசீரமைத்துள்ளது. பாகிஸ்தானுடன் இனி நடத்தப்படக் கூடிய பேச்சுவார்த்தை என்பது பயங்கரவாதம் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் ஆகியவை தொடர்பாகவே இருக்கும்.

பாதுகாப்புத் துறையில் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்ட அமலாக்கமானது நாட்டின் தேசியப் பாதுகாப்பில் முக்கிய அங்கமாகும். 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின்போது அது முக்கியப் பங்கு வகித்தது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வசிக்கும் மக்கள் நமது உறவினர்கள் என்று நான் நம்புகிறேன். 'ஒரே பாரதம் - உன்னத பாரதம்' என்ற தீர்மானத்தில் நாம் உறுதியாக இருக்கிறோம். புவியியல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நம்மை விட்டுப் பிரிந்த பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மக்கள் இந்தியா திரும்பும் நாள் தொலைவில் இல்லை. இந்தியாவுடன் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் இணைவது என்பது இந்த நாட்டின் கலாசார, சமூக, பொருளாதார வளமையைச் சார்ந்ததாகும்.

ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வாழும் பெரும்பாலான மக்கள் இந்தியாவுடன் தங்களுக்கு ஆழமான தொடர்பு இருப்பதாகவே கருதுகின்றனர். அவர்களில் சிலர் மட்டுமே தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனர்.

இந்தியா எப்போதுமே இதயங்களை இணைப்பது பற்றிப் பேசி வருகிறது. ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வசிப்பவர்கள் நம் நாட்டுக்குத் திரும்பி 'நாங்கள் இந்தியர்கள்' என்று கூறுவார்கள் என்று நம்புகிறோம்.

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத மறைவிடங்களையும் ராணுவ தளங்களையும் நாம் அழித்தோம். நாம் இதற்கு மேலும் செய்திருக்க முடியும். ஆனால் வலிமை, கட்டுப்பாடு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புக்கான பெரிய உதாரணத்தை நாம் ஏற்படுத்தினோம்.

10 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் பாதுகாப்புத்துறை ஏற்றுமதி ரூ.1,000 கோடியாக இருந்தது. தற்போது அது ரூ.23,500 கோடி என்ற சாதனை அளவை எட்டியுள்ளது. பாதுகாப்புத் துறையில் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டமானது இந்தியாவின் பாதுகாப்புக்கும் வளமைக்கும் அவசியம் என்பது நிரூபணமாகியுள்ளது.

இன்று நாம் போர் விமானங்களையும் ஏவுகணை கட்டமைப்புகளையும் தயாரிப்பது மட்டுமின்றி புதிய சகாப்தத்துக்கான போர் தொழில்நுட்பத்தையும் உருவாக்கி வருகிறோம். ஐந்தாவது தலைமுறை ஜெட் போர் விமானங்களைத் தயாரிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது என்றார் அவர்.

பிஆர்எஸ் கட்சியில் அண்ணன்-தங்கை மோதல் உச்சம்

ஹைதராபாத், மே 29: தெலங்கானாவில் எதிர்க்கட்சியான பாரத ராஷ்டிர சமிதி கட்சியின் (பிஆர்எஸ்) செயல் தலைவர் கே.டி.ராமராவுக்கும், அவரின் சகோதரி கே.கவிதாவுக்குமிடையே அதிகார மோதல் உச்சத்தை எட்டியுள்ளது.

தனது தந்தை கே.சந்திரசேகர் ராவ் உருவாக்கிய கட்சியை தான் சிறையில் இருந்தபோது பாஜகவுடன் இணைக்க ராம ராவ் முயற்சித்தார் என்று கே.கவிதா குற்றஞ்சாட்டினார். இதன்மூலம் பிஆர்எஸ் கட்சியின் உள்கட்சி மோதல் மேலும் அதிகரித்துள்ளது.

ஹைதராபாதில் வியாழக்கிழமை செய்தியாளர் சந்திப்பை கே.கவிதா நடத்தினார். அப்போது அவர் கூறியதாவது: தில்லி மதுபானக் கொள்கை ஊழலில் பொய்க் குற்றச்சாட்டு கூறி கடந்த ஆண்டு என்னை தில்லி திகார் சிறையில் அடைத்தனர். அப்போது, பாஜகவுடன் எங்கள் பிஆர்எஸ் கட்சியை இணைக்கும் திட்டத்தை சிலர் முன்வைத்தனர். ஆனால், அதை நான் முற்றிலும் நிராகரித்துவிட்டேன்.

சிறையில் இருந்தபோது ஊடகங்களில் ஒரு தரப்பும், சமூக வலைதளங்களில் சிலரும் திட்டமிட்டே என் மீது அவதூறு பரப்பினர். அப்போது கட்சித் தலைவர்கள் (சகோதரர் செயல் தலைவர் கே.டி.ராம ராவ், அவரின் ஆதரவாளர்கள்) என்னைக் காக்க முன்வரவில்லை.

பிஆர்எஸ் தலைவர் சந்திரசேகர் ராவுக்கு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ள நிலையில், நீங்கள் (கே.டி.ராம ராவ்) அமெரிக்காவில் கொண்டாட்டத்துக்காக சென்றுவிட்டீர்கள் என்றார் கவிதா.

தெலங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து இருமுறை முதல்வராக இருந்தவர் கே.சந்திரசேகர் ராவ். ஆனால், குடும்ப அரசியல், ஊழல் நிறைந்த நிர்வாகத்தால் கடந்த 2023 இறுதியில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் அக்கட்சி காங்கிரஸிடம் தோல்வியடைந்தது.

இதன்பிறகு அக்கட்சியில் இருந்து மூத்த தலைவர்கள் பலரும் வெளியேறத் தொடங்கினர். உள்கட்சி பிரச்னையும் அதிகரித்தது. உடல்நலப் பிரச்னைகள் காரணமாக சந்திரசேகர் ராவ் தீவிரமாக அரசியலில் ஈடுபடவில்லை. கட்சியில் அவரின் மகன் ராம ராவ், மகள் கவிதா இடையே அதிகாரப் போட்டி நிலவி வருகிறது.

சிறந்த தேர்தல் மேலாண்மைக்கு 100 நாள்களில் 21 முன்னெடுப்புகள்

இந்திய தேர்தல் ஆணையம்

புது தில்லி, மே 29: நாட்டின் சிறந்த தேர்தல் மேலாண்மைக்கும், வாக்காளர்களின் அனுபவத்தை மேம்படுத்தவும் கடந்த 100 நாள்களில் இந்திய தேர்தல் ஆணையம் 21 முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளதாக அதிகாரிகள் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

இதுகுறித்து தேர்தல் ஆணைய அதிகாரிகள் மேலும் கூறியதாவது: நாட்டின் 26-ஆவது தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரின் முதல் 100 பணி நாள்களில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வாக்குச்சாவடிக்கு வாக்காளர்களின் வருகையை அதிகரிக்க, ஒரு வாக்குச்சாவடிக்கான அதிகபட்ச வாக்காளர்களின் எண்ணிக்கை 1,500-லிருந்து 1,200-ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், பல அடுக்குமாடி குடியிருப்புகள் நிறைந்த, அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட பகுதிகளில் கூடுதல் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும். எந்தவொரு வாக்காளரும் வாக்களிப்பதற்கு 2 கி.மீ.க்கு மேல் பயணிக்கக் கூடாது என்பதை உறுதி செய்வதை ஆணையம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

வாக்குச்சாவடி எண் குறித்த தெளிவான விவரங்களுடன் வாக்காளர் தகவல் சீட்டுகள் மறுவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளன. வாக்காளர்களின் வசதிக்காக ஒவ்வொரு வாக்குச்சாவடியின் நுழைவாயிலிலும் கைப்பேசியை ஒப்படைத்து பின்னர் திரும்பப் பெற்றுக்கொளும் வசதி அமைக்கப்படும்.

அரசியல் கட்சிகள் உள்பட வேட்பாளர்களால் அமைக்கப்படும் வாக்காளர் உதவி மையங்கள் வாக்குச்சாவடி வளாகத்திலிருந்து 200 மீட்டருக்குப் பதிலாக 100 மீட்டருக்கு அப்பால் அனுமதிக்கப்படும்.

தற்போதுள்ள 40-க்கும் மேற்பட்ட செயலிகளுக்குப் பதிலாக, அனைத்து தரப்பினருக்கும் ஒரே இடத்தில் அனைத்து சேவைகளையும் வழங்கும் நோக்கில் ஒருங்கிணைந்த வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இறந்த வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து சரியான நேரத்தில் மற்றும் சரிபார்க்கப்பட்ட முறையில் நீக்குவதற்கு, இந்திய பதிவாளர் இயக்குநரிடமிருந்து இறப்பு பதிவு தரவுகளை நேரடியாக ஒருங்கிணைக்கும் முயற்சியையும் தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது. சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதன்படி இடைத் தேர்தலுக்கு முன்னதாக ஒரு சிறப்பு வாக்காளர் சேர்ப்பு முகாம் நடத்தப்படும். அரசியல் கட்சிகளுடனான தொடர்பை முறைப்படுத்தும் நடவடிக்கையாக, 28,000-க்கும் மேற்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நாடு முழுவதும் 4,719 கூட்டங்களை தேர்தல் ஆணையம் நடத்தியுள்ளது.

தேர்தல் செயல்முறையில் ஈடுபட்டுள்ள 28 வகை பங்குதாரர்களுக்கு ஒரு விரிவான பயிற்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி மக்கள் பிரதிநிதித்துவச் சட்டங்கள் 1950 மற்றும் 1951; வாக்காளர் பதிவு விதிகள் 1960; தேர்தல் நடத்தை விதிகள் 1961 ஆகியவற்றின் விதிகள் மற்றும் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டவை.

இத்துடன் தேர்தல் ஆணையத்தின் தலைமையகத்தில் 'பயோமெட்ரிக்' வருகைப் பதிவேடு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் அளவிலான ஆய்வுக் கூட்டம் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. ஆணையத்தின் உள் ஒருங்கிணைப்பு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் மோற்கொள்ளப்படுகின்றன என்று அதிகாரிகள் கூறினர்.

அமர்நாத் யாத்திரைக்கு 42,000 சிஏபிஎஃப் வீரர்கள் பாதுகாப்பு

மத்திய அரசு உத்தரவு

புது தில்லி, மே 29: ஜம்மு-காஷ்மீரில் நிகழாண்டு அமர்நாத் யாத்திரைக்கு மத்திய ஆயுதக் காவல் படைகளின் (சிஏபிஎஃப்) 42,000 வீரர்களை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தெற்கு காஷ்மீரில் இமயமலையில் 3,880 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள அமர்நாத் குகைக் கோயிலில் இயற்கையாக உருவாகும் பனிலிங்கத்தை தரிசிக்க பக்தர்கள் ஆண்டுதோறும் யாத்திரை மேற்கொள்வது வழக்கம்.

அனந்த்நாக் மாவட்டத்தில் 48 கி.மீ. தொலைவுள்ள பஹல்காம் வழித்தடம், கந்தர்பால் மாவட்டத்தில் 14 கி.மீ. தொலைவுள்ள பால்டால் வழித்தடம் என இரு வழித்தடங்களில் இந்த யாத்திரை நடைபெறும். பால்டால் வழித்தடம் குறைவான தொலைவு கொண்டது என்றபோதும், செங்குத்தான பாதையாகும்.

நடப்பாண்டு யாத்திரை வரும் ஜூலை 3-ஆம் தேதி தொடங்கி 38 நாள்களுக்கு நடைபெறவுள்ளது. இதற்கான முன்பதிவு ஏற்கெனவே தொடங்கியது.

இதனிடையே, சுற்றுலாத் தலமான பஹல்காமில் கடந்த மாதம் 26 பேர் கொல்லப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, அமர்நாத் யாத்திரை திட்டமிட்டபடி நடைபெறுமா என்ற கேள்வி எழுந்தது. அதேநேரம், திட்டமிட்டபடி யாத்திரை நடைபெறும் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சக அதிகாரிகள் வியாழக்கிழமை கூறியதாவது:

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலால் எழுந்துள்ள சவால்களைக் கருத்தில்கொண்டு, அமர்நாத் யாத்திரைக்கான பாதுகாப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎஃப்), எல்லை பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்), மத்திய தொழிலக பாதுகாப்புப் படை (சிஐஎஸ்எஃப்), இந்திய-திபெத் எல்லைக் காவல் படை (ஐடிபிபி) மற்றும் சஷஸ்திர சீமா பல் (எஸ்எஸ்பி) ஆகிய மத்திய ஆயுதக் காவல் படைகளின் 580 கம்பெனிகளை (சுமார் 42,000 வீரர்கள்) பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் 424 கம்பெனி படையினர், வெளியிடங்களில் இருந்து ஜம்மு-காஷ்மீருக்கு அனுப்பப்படுவர். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்ட 80 கம்பெனி படையினர் உள்பட ஜம்மு-காஷ்மீரில் ஏற்கெனவே உள்ள 180 கம்பெனி படையினர், யாத்திரை பாதுகாப்புப் பணிக்கு மாற்றப்படுவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மையில் ஜம்மு-காஷ்மீருக்கு வருகை தந்த சிஆர்பிஎஃப் தலைமை இயக்குநர் ஞானேந்திர பிரதாப் சிங், அமர்நாத் யாத்திரைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இதேபோல், பிஎஸ்எஃப் தலைமை இயக்குநர் தல்ஜித் சிங் செளதரியும் விரைவில் காஷ்மீருக்கு பயணித்து, பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, தில்லியில் பிரதமர் மோடியை ஜம்மு-காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா இம்மாத தொடக்கத்தில் சந்தித்தார். அப்போது, அமர்நாத் யாத்திரை சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்வது குறித்து இருவரும் ஆலோசித்தனர்.

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.,

கார்ப்பொரேட் அலுவலகம் / தலைமை அலுவலகம் : நேஷனல் இன்ஷீரன்ஸ் பில்டிங், 6-ஆவது தளம், J.T. சாலை, அரிஸ்டோ ஹோட்டல் அடுத்து, சர்ச் கேட், மும்பை - 400 020. தொலைபேசி: (022) 2285 1765 / 66 / 67.

கிளை அலுவலகம் : ஸ்ரீ கிருஷ்ணா என்க்ளேவ், எண்.75-E/3, 3-ஆவது தளம், தில்லை நகர், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு - 620 018.

கிளை மின்னஞ்சல் முகவரி: trichy@gichfindia.com, அதிகாரப்பூர்வ அலுவலர்: திரு. V.குமரகுரு, தொடர்பு: 9843118900, அலுவலகத் தொலைபேசி:0431-2762752.

E-ஏல விற்பனை அறிவிப்பு

2002-ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச்சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச்சட்டத்தின்படி கீழே கையொப்பமிட்டுள்ளவர், GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்-இன் (GICHFL) அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-இன் கீழ் மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கவேண்டிய 2002-ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-இன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு/அடமானதாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்புகளை (DEMAND NOTICE) அனுப்பி அந்த அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் கடன் பாக்கியைச் செலுத்துமாறு கோரியிருந்தார். ஆனால் கடன்தாரர்கள்/அடமானதாரர்கள் தங்களது கடன் பாக்கியைச் செலுத்தத் தவறிவிட்டதால், மேற்படி சட்டம் பிரிவு 13(4) & பிரிவு 14-இன் கீழ் மற்றும் மேற்படி விதிகள் 8-இன் கீழ், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.-இன் அதிகாரபூர்வ அலுவலர் கீழ்காணும் சொத்துகளை சுவாதீனத்தில் (Possession) எடுத்துக் கொண்டுள்ளார்.

வ. எண்	கோப்பு எண்	கடன்தாரர் & கூட்டு கடன்தாரர் பெயர்	சொத்து முகவரி மற்றும் சொத்து பரப்பளவு விவரம்	கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி	சுவாதீன தேதி	29.05.2025 அன்றுள்ளபடி மொத்த கடன் பாக்கி (POS, வட்டி மற்றும் இதர செலவுகள் உட்பட) (ரூபாயில்)	குறைந்தபட்ச (ரிசர்வ்) விலை (ரூபாயில்)
1.	TN 0190600100721	சொக்கலிங்கம் P விஜயலட்சுமி C அம்பிகாபதி K (ஜாமீன்தாரர்)	வீட்டு எண்: 26-12, SF எண்.260/1A, வார்டு எண்.9, 'வடுகர் தெரு 4ஆவது தெரு', இலுப்பூர் கிராமம் & டவுன் பஞ்சாயத்து, புதுக்கோட்டை- 622102. **(நிலம் - 810 சதுர அடி, BUA - 1284 சதுர அடி, (GF+FF))**	23-09-2009	03-01-2025 (நேரடி)	2092042/-	16,44,450/-
2.	TN 0190610001357	நாகராஜன் யுவராஜா V சத்தியவதி	மனை எண்.84, SF. எண்.124/1, வல்லாளகண்ட அய்யனார் நகர், குண்டூர் கிராமம், திருவெறும்பூர் தாலுக்கா, திருச்சி - 620 007. **(நிலம்- 1200 சதுர அடி, BUA - 954 சதுர அடி.)**	02-07-2019	30-04-2022 (நேரடி)	6346726/-	31,40,255/-
3.	TN 0190600100208 & TN 0190600100552	M N G நாதன்/ பிலோமினா நாதன் கிறிஸ்டோபர் R சிம்மன் பா (ஜாமீன்தாரர்)	S F எண்.235/2C, மனை எண்.155, 'VGP செல்வபுரம்', கொடையூர், தாளப்பட்டி தாலுக்கா, அரவக்குறிச்சி கிராமம், கரூர் - 639003. **(நிலம் - 1590 சதுர அடி, BUA - 576 சதுர அடி)**	08-07-2011	11-06-2012 (அடையாள)	1867015 + 457544 = 2324559/-	10,03,200/-

E ஏலத் தேதி & நேரம்: **30.06.2025, பிற்பகல் 2:00 மணி முதல் 3:00 மணி வரை**, தலா 5 நிமிடங்கள் கொண்ட வரம்பற்ற கால நீட்டிப்புகளுடன். இதற்கான இணையதளம் **(https://www.bankauctions.in).** உரிய டெண்டர் படிவத்தில் அமைந்த மற்றும் EMD & KYC இணைக்கப்பட்ட டெண்டர்/ மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளி ஆன்லைன் வாயிலாக அல்லது நேரில் மேற்படி முகவரியில் உள்ள GIC அலுவலகத்தில் சமர்ப்பிக்க இறுதி தேதி: **28.06.2025.**

மேற்படி சொத்து/ சொத்துகள் E ஏல விற்பனைக்கான இந்த பொது அறிவிப்புடன் (SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் படியான விதிகளின் கீழ் அமைந்த விதிமுறை நிபந்தனைகளின் படி) மேற்படி சொத்துகளை "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" எனும் அடிப்படையில் வாங்குவதற்கு ஆன்லைன் முறையில்/ சீலிட்ட உறையில் அமைந்த விலைக்குறிப்பீடுகளை GICHFL வரவேற்கிறது.

ஏல விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு :

1. E-ஏலமானது "உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளது உள்ளவாறு, உள்ளதெல்லாம் உள்ளவாறு" மற்றும் "பின் தொடர்ச்சியாக எவ்வித உதவிக்கும் நாட முடியாது" என்ற அடிப்படையில் நடத்தப்படும். விற்பனை "ஆன்லைன்" முறையில் நடைபெறும். E ஏலமானது GICHF அங்கீகரித்த E ஏல சேவை வழங்குநர் "M/s.4 Closure" மூலமாக நடத்தப்படும்.
2. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்களது பெயர்களை https://bankauctions.in/ எனும் இணையதளத்தில் தங்களைப் பதிவு செய்து கொண்டு பயனாளி அடையாளம் மற்றும் கடவுச் சொல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் தேவையான E ஏலம் குறித்த ஆன்லைன் பயிற்சியை பின்வரும் சேவை வழங்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்: **M/s. 4 Closure, அமீர்பேட்டை, ஹைதராபாத், தொ.பே: 040-23736405 மற்றும் +91-8142000062 / 66, மின்னஞ்சல் முகவரி:Prakash@bankauctions.in, கிளை மின்னஞ்சல் முகவரி: trichy@gichfindia.com, அதிகாரப்பூர்வ அலுவலர்: திரு.V.குமரகுரு, தொடர்பு: 9843118900, அலுவலகம் தொ.பே: 0431-2762752.**
3. E-ஏலமானது SARFAESI சட்டம்/ விதிகள் 2002-இல் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும், இங்கு மற்றும் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறை நிபந்தனைகளுக்கு உட்பட்டும், டெண்டர் மற்றும் விலைப்புள்ளி ஆவணத்தில் காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் நடத்தப்படும். ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டே டெண்டர்/ விலைப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டும்.
4. ஆன்லைன் E-ஏலத்தில் பங்கேற்பதற்கு வசதியாக ஒவ்வொரு ஏலதாரரும் தங்களுக்குச் சொந்தமான மின்னஞ்சல் முகவரி வைத்திருப்பது அவசியம்.
5. GICHF அதிகாரப்பூர்வ அலுவலர் முன்னிலையில் தகுதியுடைய டெண்டர்தாரராக தங்களை முறையாக பதிவு செய்து கொண்டாரானால் E-ஏல விலைக்குறிப்பீடு இணையதளம் வாயிலாக ஆவணங்களை சமர்ப்பித்து பங்கேற்க தங்களது விருப்பத்தை தெரிவிக்க வேண்டும். E-ஏல சேவை வழங்குனரிடமிருந்து உள்நுழை அடையாளம் மற்றும் கடவுச் சொல்லை பெற்றுக்கொள்வது டெண்டர்தாரரின் / ஆன்லைன் விலைக்குறிப்பீட்டாளரின் தனிப் பொறுப்பாகும்.
6. மேற்காணும் குறைந்தபட்ச (ரிசர்வ்) விலைக்கும் கீழ் மேற்படி சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது.
7. விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டேவணித்தொகை/களை (EMD), அதாவது இதன் மேற்குறிப்பிட்ட அந்தந்த அடிப்படை விலைகளின் 10% தொகையை **DD /RTGS / NEFT வாயிலாக 'GIC Housing Finance Ltd' எனும் பெயரில் பின்வருமாறு செலுத்தவேண்டும்: வங்கிப் பெயர்:Union Bank of India, A/c No: 005111010000039 - A/c Name:GIC HOUSING FINANCE LTD E AUCTION COLLECTION, Branch Name : FORT Address: Union Bank of India, FORT, MUMBAI-400001, IFSC Code - UBIN0800511.**
8. மேற்படி EMD தொகை வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளர் விஷயத்தில் சரி செய்துகொள்ளப்படும், மற்றவர்களுக்கு திருப்பி அளிக்கப்படும். EMD தொகை மீது வட்டி ஏதும் தரப்படமாட்டாது.
9. மேற்படியான EMD தொகை இணைக்கப்பட்ட விலைப்புள்ளிகள் ஆன்லைன் வாயிலாக இணையதளத்தில் (https://bankauctions.in/) சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் EMD செலுத்தியதற்கான ஆதாரமாக ஸ்கேன் செய்த பிரதி மற்றும் முகவரி சான்று PAN அட்டை உட்பட ஸ்கேன் செய்யப்பட்ட KYC ஆவணங்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது உரிய படிவத்தில் விலைப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையிலிடப்பட்டு மேற்குறித்த சமர்ப்பித்தல் இறுதி தேதி நேரத்திற்கு முன் GIC HOUSING FINANCE LTD கிளை அலுவலகங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் EMD, KYC ஆவணங்களும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
10. டெண்டர்கள் திறக்கப்பட்ட பிறகு மேற்படி குறைந்தபட்ச ரிசர்வ் விலைக்கும் குறையாமல் விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ள ஏலதாரர்கள் மத்தியில் மேலும் அவர்கள் தங்களது விலையை உயர்திக் கோருவதற்கு அதிகாரப்பூர்வ அலுவலர் தனது தனி முடிவின் படி ஒரு வாய்ப்பு அளிப்பார்.
11. அதிகாரப்பூர்வ அலுவலரால் உயர்ந்தபட்ச விலை ஏற்கப்பட்டு, ஏல விற்பனையில் வெற்றிபெற்ற விலைக் குறிப்பீட்டாளர் தாம் கோரிய விலையில் 25% தொகையை அதாவது அவர் ஏற்கனவே செலுத்திய EMD தொகையை கழித்துக்கொண்டு உடனே செலுத்த வேண்டும். தவறினால், அவரது EMD தொகை பறிமுதலாகும். அதிகாரப்பூர்வ அலுவலரின் தனி முடிவின் படி விற்பனை உறுதி செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் மீதி 75% விற்பனைத் தொகை செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் மீதித் தொகை செலுத்தப்படா விட்டால் அதுவரை செலுத்தப்பட்ட தொகை யாவும் பறிமுதலாகும் அவ்வாறு பறிமுதல் செய்வது தொடர்பாக வெற்றி பெற்ற விலைக் குறிப்பீட்டாளருக்கு மேல் அறிவிப்பு எதுவும் அதிகாரப்பூர்வ அலுவலர் தர வேண்டும் என்பது அவசியமில்லை.
12. 'வாங்குபவரே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' ("caveat emptor") (BUYER BEWARE) என்ற கொள்கையை ஏலதாரர்கள் கடைப் பிடிக்க வேண்டும். மேலும், சொத்து தொடர்பான கடனுக்கு ஈடான சொத்து அல்லது நிறுவனத்தின் வில்லங்கங்கள், சட்டப்படியான நிலுவைகள், பொறுப்புகள், வரி பாக்கிகள் வருமான வரி, கலால் வரி, தொழிலாளர் பாக்கி, மின்சாரம், பராமரிப்பு பாக்கிகள் முதலானவற்றைப்பற்றி நன்கு தனியாக விசாரித்துக் கொள்ளவேண்டும். நகராட்சி வரிகள் பராமரிப்பு/ சங்கக் கட்டணங்கள் மின் கட்டணங்கள் தண்ணீர் கட்டணங்கள் முத்திரைத் தாள் தீர்வை பதிவு கட்டணங்கள் (பொருந்துமானால்) எதுவும் இருப்பின் மற்றும் எதிர்பாராத செலவுகள் மற்றும் கட்டணங்கள் அதாவது சொத்து விற்பனை விலை தவிர மற்ற எந்தவொரு செலவுகளையும் வெற்றிப்பெற்ற விலைக்குறிப்பீட்டாளரே ஏற்க வேண்டும்.
13. விற்பனை சான்றிதழ் தொடர்பான கட்டணங்கள் /செலவுகள் அதாவது பதிவு கட்டணம், முத்திரைத் தாள் கட்டணம், வரிகள், தீர்வைகள் மற்றும் தனது பெயருக்கு கடனுக்கு ஈடான சொத்தினை மாற்றுவது தொடர்பாக ஏற்படும் அனைத்து செலவுகளையும் வெற்றிப்பெற்ற விலைக்குறிப்பீட்டாளரே ஏற்க வேண்டும்.
14. விற்பனைத் தொகை முழுமையாகப் பெறப்பட்ட பிறகே வெற்றிப்பெற்ற விலைக்குறிப்பீட்டாளர் பெயரில் மட்டுமே விற்பனைச் சான்றிதழ் அளிக்கப்படும்.
15. E-ஏல விற்பனை விதிமுறை நிபந்தனைகளின் படி மேற்குறித்த சொத்தினை வாங்குவதற்கான ஆர்வமுள்ள நபர்களை/ தரப்பினரை கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் கொண்டு வரலாம்.
16. வேண்டுகோளின் படி, அதிகாரப்பூர்வ அலுவலரின் வசதிக்கு ஏற்ப மேற்படி சொத்துகளை பார்வையிடலாம்.
17. உயர்ந்தபட்ச விலைப்புள்ளியை அல்லது எந்தவொரு அல்லது அனைத்து விலைப்புள்ளிகளையும் ஏற்க வேண்டும் என்ற கட்டாயம் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு இல்லை. காரணம் எதையும் குறிப்பிடாமல் எந்தவொரு அல்லது அனைத்து டெண்டர்களையும் ஏற்க அல்லது நிராகரிக்க அவருக்கு உரிமை உண்டு.
18. மேலே குறிப்பிட்டுள்ளபடி சொத்துக்களின் மீது நிலுவையில் உள்ள எந்தவொரு பொறுப்புகளுக்கும் GICHFL பொறுப்பல்ல. சொத்து "உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளது உள்ளவாறு, உள்ளதெல்லாம் உள்ளவாறு" மற்றும் "பின் தொடர்ச்சியாக எவ்வித உதவிக்கும் நாட முடியாது" எனும் அடிப்படையில் வாங்குவதற்கு ஏலம் விடப்படும்.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் சொத்துக்களின் முழு விளக்கத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட E-ஏல சேவை வழங்குநர் "M/s.4 closure" வலைத்தளம்: https://www.bankauctions.in-ஐ பார்க்கவும்.

SARFAESI, 2002 சட்டத்தின் கீழ் 30 நாட்கள் சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்கள் /ஜாமீன்தாரர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தொகையை, தற்போதைய வட்டி மற்றும் துணை செலவுகளுடன் E-ஏல தேதிக்கு முன் செலுத்த வேண்டும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. தவறினால் சொத்து ஏலம் விடப்படும்/விற்கப்படும், மீதமுள்ள நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின், அதுவும் வட்டி மற்றும் செலவுடன் வசூலிக்கப்படும்.

தேதி : 30.05.2025
இடம் : திருச்சி

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்- க்காக
அதிகாரபூர்வ அலுவலர்